நடைபெற்றிருக்கிறது. அமைச்சரவர்கள் விரிவான விளக்கத்தைக் கொடுத்திருக்கிறார்கள். இந்த விளக்கத்திற்குப் பின்னால் மேலும் இந்தப் பிரச்சனையை விவாதிக்க அவையை ஒத்திவைக்க வேண்டிய அவசியம் இல்லையென்று கூறி, அதற்கான அனுமதியை மறுக்கிறேன்.

(ஆ) விக்ரமசிங்கபுரம் ஆர்.வி. மில் தொழிலாளர் வேலைநிறுத்தம் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, திரு. எஸ். சங்கு முத்துத் தேவர், திரு. எஸ். அழகர்சாமி, திரு. க. உரொ. எட்மண்ட், திரு. முனு ஆதி, திரு. என். கே. பழனிசாமி ஆகியோர் விக்ரமசிங்க புரம், திருநெல்வேலி மாவட்டம் ஆர்.வி. மில் தொழிலாளர் வேலை நிறுத்தம் குறித்து விவாதிக்க வேண்டுமென்று ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள். தொழிலாளர்கள் வேலை நிறுத்தம், கதவடைப்பு முதலிய தொழிற்தகராறுகள் குறித்துத் தீர்த்துக்கொள்ள வேறு முறைகள் இருக்கின்ற காரணத்தால் இதற்காகப் பேரவையை ஒத்திவைக்கத் தேவையில்லை என்று கூறி, இத்தீர்மானங்களுக்கு என் அனுமதியை மறுக்கிறேன்.

திரு. க. உரொ. எட்மண்ட் : சார், பாயின்ட் ஆஃப் ஆர்டர் நான் கொடுத்திருப்பதும் தொழிலாளர் பிரச்சனையைப்பற்றியது தான். முந்திய தீர்மானமும் தொழிலாளர்கள் பற்றியதுதான். அதற்கு அனுமதி அளித்துவிட்டு, என்னுடைய தீர்மானத்திற்கு அனுமதி மறுக்கப்படுவது ஏன்? இரண்டும் தொழிலாளர் பிரச்சனை தானே.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது டிரான்ஸ்போர்ட் பற்றியது. பெரிய விவகாரம் மட்டுமல்ல; முக்கியமானதும் கூட. அதனால் அதற்கு அனுமதி அளித்தேன்.

THIRU G. R. EDMUND : Sir, on a point of order. My motion is concerned with Spinning Mill. After all, it is also a question of labour and how can you discriminate between one labour problem and another labour problem?

1973 நவம்பர் 21]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அனுமதி அளிப்பதும் மறுப்பதும் நிகழ்ச்சியின் முக்கியத்துவத்தைப் பொறுத்தது.

திரு. க. உரோ. எட்மண்ட் : நான் கொடுத்திருப்பதும் முக்கியமானதுதான். 6,000 தொழிலாளர்கள் வேலை இல்லாமல் வெளியே இருக்கிறார்கள்.

5. அறிக்கை அளித்தல்.

வீட்டுவசதி வாரியத்தின் கணக்குகள் மீதான தணிக்கை அறிக்கை பற்றிய பொது தொழில் நிறுவனங்கள் குழுவின் முதலாவது அறிக்கை.

DR. S. M. PALANIAPPAN : Sir, on behalf of the Chairman of the Committee on Public Undertakings, I rise to present the First Report of the Committee on the Audit Report on the accounts of the Tamil Nadu Housing Board for the year 1964-65.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, I have also given notice of certain motions under Rule 41 and Rule 42. Nothing has ocme before the House. They are of public importance. I would like to know.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : "நோட்டீஸ் கொடுத்தேனே, என்ன ஆயிற்று ?" என்று அவையில் கேட்பது மரபு அல்ல. அதை என் அறையில் வந்து கேட்கவேண்டும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : சாதாரணமான மரபு அப்படித்தான். பழைய மரபை ஒட்டியே சொல்லிவிட்டால் நன்றாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேட்கிற வழக்கம் இல்லை. அதற்கு விடை அளிக்கிற வழக்கமும் இல்லை.

THIRU J. JAMES : Sir the, reptrt of the Committee on Public Undertakings has not been presented by its Chairman. May I know what has happened to the Chairman of that Committee?